# அரசுக்கான ஆதரவைவிலக்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

(கொழும்பு)

பிரேமதாசா அரசுக்கு ஸ்ரீலங்க முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 1 இதழ் 249
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17 — 10 — 1992

## இறந்தோர் தொகை 165ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் நடந்த தாக்குதலின்போது இறந்தவர்களின் எண்ணிக்கை 165ஆக அதிகரித்துள்ளதாக

(4ம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடத்த தனிநபர் குழு நியமனம்

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் 4 கிராமங்களிலும் நேற்று முன்தினம் நடந்த கொலைகள் குறித்து விசாரணை செய்து

(4ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கை முற்றுமுழுதாகமாற்றியமைப்பு

## புதிய உத்திகளைக் கொண்டதாக்குதல் தயார்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்பட்டு புதிய உத்திகளைக் கொண்ட இராணுவ அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள புதிய இராணுவ நடவடிக்கைகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

புதிய உத்திகளை கொண்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் அதன் செயற்பாட்டு நடைமுறை குறித்தும் கூட்டுப்படைத் தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி வடக்கு கிழக்கில பிரதேசத்திற்கும், இடத்திற்கும் ஏற்றவகையில் தாக்குதல் நடவடிக்கை மாற்றியமைக்கப்படும்.

இத்தாக்குதல் நடவடிக்கைகள் அவ்வப்பகுதி படைத் தளபதிகளினால் மேற்கொள்ளப்படும். முப்படைத் தளபதிகளினதும் பொலிஸ் மா அதிபரினதும் ஆலோசனையின்

(4ம் பக்கம் பார்க்க)

## அடையாள அட்டையை பெறும் காலக்கெடுவை நீடிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1972/73ம் காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை புதுப்பித்தற்கான காலக்கெடுவை 1993ம் ஆண்டு யூன் மாதம் வரை நீடிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரைக் கேட்டுள்ளார்

1972/73ம் காலங்களில் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் இவ்வரு

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உடை தரித்த ஆயுதபாணிகள் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை வேட்டையாடப் போகிறோம்எனக்கூறிக் கொண்டு திரியும் ஆயுதம் தாங்கிய இராணுவ உடை தரித்த கோஷ்டி ஒன்று பண்டாரவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கும்பல்வளவில் கைதுசெய்யப்பட்ட இக்கோஷ்டியிடமிருந்து சுழல் துப்பாக்கிகள், இராணுவ உடைகள் போலி இராணுவ அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளையில் இராணுவத்

(4-ம் பக்கம் பார்க்க

## தமிழ் கிராமங்களுக்கு பலத்த பாதுகாப்பு!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் கிராமங்களில் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

பொலநறுவை எல்லைப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு பழிவாங்கும் தாக்குதல் ஏதும் நடைபெறலாமென்பதாலேயே இவ்வாறு தமிழ்ப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக

[4ம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ்மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் நேற்று பலத்த பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இதேவேளையில் நேற்று

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - பிரேமா சந்திப்பிற்கு ஏற்பாடாம்

(மணிலா)

இலங்கையில் நிலவும் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவையும் எதிர்க்கட்சித்தலைவர் அனுரா பண்டாரநாயக்காவையும்விடுதலைப் புலிகள் பிரமுகா சந்தித்து பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகள்கொழும்பில நடைபெற்றுவருவதாக தமிழ் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக வெரித்தாஸ் நேற்றுதெரிவித்தது.

இந்த முயற்சி தொடர்பாக அவுஸ்திரேலியாவிலிருந்தும்,

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு மீண்டும் பிரிட்டன் உதவி

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு மீண்டும் பொருளாதார உதவியை பிரிட்டன் வழங்க முன்வந்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது

(4-ம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழ் மாணவர் மீதான கெடுபிடிகளை நீக்குக
### - அமைச்சர் செல்லச்சாமி

(சென்னை)

தமிழகத்தில் கல்வி பயின்று வரும் இலங்கைத் தமிழ் மாணவர்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கெடுபிடிகள் அகற்றப்படவேண்டும் என இலங்கைத் தொழில்துறை மற்றும் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தமிழக ஆளுநர் பீஷ்மர் நாராயணசிங்கிடம் வலியுறுத்தியுள்ளார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு தமிழகம் வந்திருக்கும் அமைச்சர், ஆளுநரைச் சந்தித்து இவ்விடயம் குறித்து உரையாடி

(4-ம் பக்கம் பார்க்க)

## 650மெ. தொன் மா குமணவில் வருகிறது

(திருநெல்வேலி)

அடுத்த வாரமளவில் வர இருக்கின்ற குமணக் கப்பலில் 650 மெற்றிக் தொன் மா அனுப்புவதாக அத்தியாவசிய சேவைகள் நாயகம் ராபீக் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த செலவை சேமித்தால் 6 மாதத்தில் நாட்டில் வறுமையை ஒழிக்கலாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்திற்காக செலவிடப்படும் பெரும் தொகைப் பணத்தினை சேமிக்கமுடியுமானால் நாட்டில் நிலவும் வறுமையை 6மாதத்தில் ஒழிக்கமுடியுமென ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஆடை தயாரிப்பு தொழிற்சாலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரை

[4ம் பக்கம் பார்க்க]

## தெரி. குழுவின் யோசனைக்கு கூட்டணி அதிருப்தி

(கொழும்பு)

இனப்பிரச்னை குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழு சமர்ப்பித்த அறிக்கை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அதிருப்தி தெரிவித்துள்ளது.

மேற்படி அறிக்கை தம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும் நடப்பவை யாவும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும் கூட்டணி பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலை

(4-ம் பக்கம் பார்க்க)

## காடுகள் படைப்போம் கருமுகில் காண்போம்

## வரி விளம்பரம்


### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்கு மாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6887)

### தேவை

கூரைத்தகடு, கடைக்குரிய நிலை, கதவு மற்றும் உருக்கு அல்லது மரத்தளபாடங்கள் தேவை சோ. விக்னேஸ்வரன் 17 ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (சி-6897)

### நீமியா உரம்

அடிக்கட்டு உரம்கலந்தோ நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது. நீமியா உரம் பயிர் வளர்ச்சி, விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற். (ஏ-2503)


## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையின் (மங்கையர்க்கரசி) கல்லூரி பழைய மாணவிகளின் கலை விழா இன்று 17ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொன். சுந்தரலிங்கம், செல்வி கு. நாகராஜ ஐயர் ஆகியோரின் இசை மாலை நிகழ்ச்சியும், கதகளி பரத நாட்டியமும், பண்டார வன்னியன் நாடகமும் இடம்பெறவுள்ளது. (சு)

★

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 17ம்திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு அதிபர் செ. யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறும். பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார். (51)

## இராசி பலன்

**17-10-1992**

சனிக்கிழமை

**(தமிழுக்கு ஐப்பசி 01)**

ஷஷ்டி மு. இ. 10-03 வரை, மிருகசீரிடம் பி. ப. 1-20 வரை, இராகுகாலம் காலை 9-02 முதல் 10-32 வரை, சுபநேரம் காலை 8-02 முதல் 4-32 வரை. சித்தயோகம்.

மேடம்: மனைவியால் சுகம், ஆக்ஞையிடுதல், தனவரவு.

இடபம்: தொழில் பகை, மனஉளைச்சல், கடன் பயம்.

மிதுனம்: முயற்சியில் வெற்றி, புதிய ஸ்தானம், கடமையுணர்வு.

கடகம்: தனநஷ்டம், பித்த மயக்கம், தோல்வி.

சிங்கம்: கௌரவம், பயண அனுகூலம், காரியசித்தி.

கன்னி: சத்துரு ஜெயம், நிலைமாற்றம், தயாளசிந்தை.

துலாம்: பெண் பகை, மனச்சஞ்சலம், அவதி.

விருச்சிகம்; தொழில் கஷ்டம், அவமதிப்பு, இடையூறு.

தனு: ரோக நிவர்த்தி, காரிய ஜயம், சயனசுகம்.

மகரம்: புத்திரர் பெருமை, புதிய உறவு, குடும்ப மகிழ்ச்சி.

கும்பம்; தடுமாற்றம், தொழில் விக்கினம், மந்த நிலை.

மீனம்: பந்து பிரிவு, மனச்சஞ்சலம், அலைச்சல்.

— ஜோஸ்யர்

## ஆசிரியர்களின் கல்வி டிப்ளோமா பரீட்சை 24ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் ஆசிரியர்களுக்கான கல்வி டிப்ளோமாப் பரீட்சை இம்மாதம் 24ம் திகதி முதல் நவம்பர் 1ம் திகதிவரை யாழ் திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ் திறந்த பல்கலைக்கழக அதிபர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான மீட்டல் வகுப்பு ஒன்று இம்மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. (159)

## வல்லைவெளியில் 1500 பனம் விதைகள் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினரால் அண்மையில் வல்லைவெளிவீதி இரு மருங்கிலும் பனம் விதைகள் நாட்டப்பட்டன.

வல்லைவெளியை காப்பரண்களாகவும், பயன்தரும் நிழல் தரும் மரங்களாகவும், பயன்படுத்தும் நோக்குடன் மேற்படி ஒன்றியத்தினர் அண்மைக்காலமாக பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பொறுப்பாளர் தலைமையில் மேற்படி ஒன்றிய ஊழியர்கள் சுமார் ஆயிரத்துஐந்நூறு விதைகளை நாட்டினார்கள். (51)

## கட்டாக்காலி நாய்கள்

(அரியாலை)

யாழ். நகர வீதிகளில் வளர்ப்பு நாய்களைவிட விசர் நாய் தடுப்பூசி போடப்பட்ட தகடுகள் இல்லாத கட்டாக்காலி நாய்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் மக்கள் அச்சத்துடன் நடமாட வேண்டியுள்ளதாக தெரியவருகிறது. (59)

## கோணேஸ் நெசவு நிலையம்

(யாழ்ப்பாணம்

கிளிநொச்சிப் பகுதிலுள்ள தர்மபுரத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால், கைத்தறி நெசவு நிலையம் ஒன்று மீளப் புனரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இங்கு 15 பேர் பயிற்சியை முழுமையாக முடித்துள்ளதோடு, புதிதாக மேலும் 15 பயிலுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களின் மூலம் படுக்கை விரிப்பு, துவாய் போன்ற பல தரமான உற்பத்திகள் செய்யப்படுகின்றன. (அ)

## சீருடை வழங்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து தற்போது வேறு வைத்தியசாலைகளில் கடமையாற்றி வரும் மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு கடந்த 1990, 1991, 1992 ஆண்டுகளுக்கான சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லை. இவற்றை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி தலைமை அலுவலகத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். (72)

## உடுபிடவைகள் விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் அதிகாரி செல்லமுத்து வீதி முகாம், கல்லூரி முகாம் 2 ஆகியவற்றில் தங்கியுள்ள அகதிகளுக்கு யாழ் நகர மத்தி றோட்டரிக் கழகத்தினர் உடுபுடவைகளை வழங்கினர்.

இவர்கள் இங்குள்ள சுமார் 100 குடும்பங்களுக்கு நல்லூர் யாழ். நகரப் பகுதியில் சேகரித்த போர்வைகள், தலையணைகள சிறுவர் சிறுமியர்களுக்கான உடுபுடவைகளையும் வழங்கியுள்ளனர். (71)

## சர்க்கரையுடன் தேநீர்

(யாழ்ப்பாணம்)

சீனித்தட்டுப்பாட்டின் காரணமாக யாழ். நகரிலுள்ள சில தேநீர்க்கடை உரிமையாளர்கள் சர்க்கரையுடன் தேநீர் வழங்கி வருகின்றனர். (159)

## கந்தபுராண வகுப்பு

(நெல்லியடி)

பருத்தித்துறை இந்து இளைஞர் மன்ற ஆதரவில் இன்று 17ம் திகதி முதல் பருத்தித்துறை சிவன் கோவில் கலா மண்டபத்தில் கந்தபுராண விரிவுரை வகுப்பு ஆரம்பமாகவுள்ளது இவ்வகுப்பில் பயில விரும்புவோர் திரு. ஜே. வைரவப்பிள்ளை, கலா மண்டபம், பருத்தித்துறை என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (162)

## குண்டு வெடிப்பில் 11 பேர் பலி

(புதுடில்லி)

மேற்கு வங்க மாநிலத்தில் பயணிகள் பஸ்ஸில் நேற்று முன்தினம் குண்டு வெடித்ததில் 11பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர். சுமார் 40 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும், இருதயப்பூர் அருகே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## தொழில்நுட்ப கல்வி சேவைகால பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சி வகுப்பொன்று இம்மாதம் 22ம் 23ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மரவேலை, நெசவு, வனைதல் பாட வகுப்புகள் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும், வானொலி பேணல் வகுப்புகள் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், மோட்டார் தொழில் நுட்ப வகுப்புகள் யாழ் இந்துக்கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

வகுப்புகள் காலை 8-30 முதல் மாலை 4-30 வரை நடைபெறும் என உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு க. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார் இப்பயிற்சியில் சகல தொழிற்கல்வி ஆசிரியர்களையும் தவறாது பங்கு பற்றுமாறும் அவர் கேட்டுள்ளார். (159)

## மருந்துகள் இல்லாததினால் கிளினிக் இயங்கவில்லை மனநோயாளர் பாதிப்பு

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் மன நோயாளர்களுக்கு போதிய வைத்திய வசதி இன்மையால் மனநோயாளர்கள் பாதிக்கப்படுள்ளனர்

மனநோயாளர்களுக்கு தேவையான அனைத்துக் கூட்டுக்குளிகைகள் எதுவும் வைத்தியசாலைகளிலோ தனியார் மருந்துக்கடைகளிலோ இல்லாதிருக்கிறது. அத்துடன் இந்நோயைக்கட்டுப்படுத்துவதற்கான ஏனைய மருந்துவகைகளும் இல்லாதிருக்கிறது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வாரம் தோறும் நடைபெற்றுவரும் மனநோயாளர்களுக்கான கிளினிக் மருந்துவகைகள் எதுவும் இன்மையால் கடந்த இரு வாரங்களாக நடைபெறவில்லை. (61)

## துணைவேந்தர் நிதியத்திற்கு உதவுமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் நலநிதியத்திற்கு வெளிநாட்டில் உள்ள அன்பர்கள், நிறுவனங்கள் உதவிபுரியுமாறு யாழ். பல்கலைக் கழக நலச் சேவைகள் பிரிவு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி நலநிதியத்தில் உள்ள பணத்தில் பற்றாக்குறை காணப்படுவதனாலும் மற்று உதவித்திட்டங்களை மேற்கொள்ள போதிய நிதி குறைவாக இருப்பதனாலேயே இவ் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (157)

## ஸ்ரீவல்லிபுரஆழ்வார் வரலாற்று நூல்வெளியீடு

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலய வரலாற்று நூல் வெளியீடு ஆலயத்தில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. எஸ். அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்றது ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ எஸ் கே புருஷோத்தமகுரு பிரம்மஸ்ரீ நடராஜக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்தினர். ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர் திரு. க. திருஞானசம்பந்தமூர்த்தி இவ்ஆலய வரலாற்று நூலை வெளியிட்டு வைத்தார். இவ்விழாவிலே அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. எஸ். விநாயகமூர்த்தி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (52)

## ஆசைப்பிள்ளை குளம் திருத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக பழுதடைந்திருந்த மாங்குளம் "கல்குவாரி" பகுதியில் அமைந்துள்ள ஆசைப்பிள்ளை குளத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினர் போரூட் நிறுவனத்தின் ஆதரவுடன் புனரமைத்துள்ளனர்

இக் குளத்தின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு 89 ஏக்கர் ஆகும். இவற்றில் 13 ஏக்கர் நிலம் 02/93 காலபோக செய்கைக்காக 13 விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது

இக் குள புனரமைப்பு வேலைகளை அப்பகுதி விவசாயிகளும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரும் சிரமதான அடிப்படையில் மேற்கொண்டனர்.


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



(ஏ 2505)

## இலங்கை அரசுக்கு பல கட்டளைகளை பிறப்பிக்க
# ஐ. நா. மனித உரிமைகள் குழு முடிவு

(கொழும்பு)
இலங்கை மனித உரிமைகளை தொடர்ந்து மீறிவருவதால் இங்கு வந்துள்ள மனித உரிமைகள் குழுவினர் இலங்கைக்கு மேலும் பல கட்டளைகளை பிறப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி தெரியவருவதாவது:

மனித உரிமைகள் மீறப்படுவதுசம்பந்தமாக ஸ்ரீலங்கா அரசுக்கு மேலும் பல சிபார்சுகளை செய்வதற்கு இரண்டாவது தடவையாக ஐ. நா. மனித உரிமைகள் குழுவினர் முன்வந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்து, அங்கு மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர், இலங்கையின் தென்பகுதியில் தற்சமயம் இக்குழுவினர் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக ஆய்வுகளை செய்துவருகின்றனர்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் அதற்காகவே தாம் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு வந்ததாக அக்குழுவினர் தெரிவித்தனர்.

மேலும் ஐ. நா. மனித உரிமை குழுவின் அறிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட பின்னர், ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் தலைமையகம் ஸ்ரீலங்கா அரசுக்கு மனித உரிமைகள் பேணல் தொடர்பாக பல கட்டளைகளையும் பிறப்பித்திருந்தது

ஐ. நா. மனித உரிமைகள் தலைமை அகம் விதித்த கட்டளைகளை மீறி, இலங்கையில் மனித உரிமைகள் மீறல் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சு-சி)

---

## லண்டன் விடுதிகளில் யாழ்ப்பாண உணவுகள்

(யாழ்ப்பாணம்)
லண்டனில் உணவுச்சாலைகள் நடாத்திவரும் யாழ்ப்பாணத்தவர் சிலர் அங்கு யாழ்ப்பாண உணவுவகைகளை அறிமுகம் செய்துள்ளனர்.

இவ்வுணவுச்சாலைகளில் கூழ், மோதகம், வாய்ப்பன், சூசியம், முருங்கைக்காய், அச்சாறு, ரசம், கிழங்கு, வெந்தயக்குழம்பு என்பன பரிமாறப்பட்டு வருகின்றன.

இவ்வுணவு வகைகளை பிரிட்டிஷாரும் வடஇந்தியர்களும் விரும்பிச் சுவைத்து மகிழ்கின்றனர். (159)

---

## ★ பருத்தித்துறை கடலில்
# கடற்படையினர் அட்டகாசம்
## மீனவர் மீது தாக்குதல்

(உடுப்பிட்டி)
பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்துச்சேவை நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக அதிகரித்து வருவதோடு, இராணுவத்தினரின் அட்டகாசங்களும் அதிகரித்து வருகிறது

பருத்தித்துறைக் கடற் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் கடலில் ரோந்து வந்த படையினர் கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட மீனவர்களை நோக்கி சென்றனர்.

மீனவர்கள் இவர்களைக் கண்டு ஓட முற்பட்ட போதிலும் என்ஜின் கோளாறு ஏற்பட்டதால் இவர்களால் ஓட முடியவில்லை. மீனவர்களை நெருங்கிய கடற்படையினர் இவர்களை தொழிலுக்குவரக் கூடாதென எச்சரித்து, ஓடுமாறு பணித்தனர்.

பின்னர் திரும்பி வந்த படையினர் இவர்களைப் பார்த்து ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டனர். என்ஜின் கோளாறு ஏற்பட்டுவிட்டதாக இவர்கள் கூறியபோது என்ஜினைக் கழற்றி கடலில் வீசிவிட்டு மீனவர்களைநோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இவர்கள் சாதுரியமாக கடலில் குதித்து கடற்படையினர் சென்ற பின்னர் ஒருவாறு படகில் ஏறி இருந்தவேளை இவரது உறவினர்கள் தங்கள் படகில் சென்று இவர்களை மீட்டுவந்தனர் இவர்களது வலைகளையும் கடற்படையினர் வெட்டிச்சென்றுவிட்டனர்.

பருத்தித்துறை முனையைச் சேர்ந்த தே. சுப்பிரமணியம் (வயது 34) அ உலகராசா (வயது 20) ஆகியோரே கடலுக்குச் சென்று மயிரிழையில் தப்பி வந்தவர்களாவர் இவர்களது என்ஜின் மீட்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. (150-61)

---

## மாற்றுப் பணியாளர்களுக்கு
# நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு

(திருநெல்வேலி)
கல்வித் திணைக்களங்களிலும் சகல பாடசாலைகளிலும் கடமையாற்றும் நிவாரணக் காவலாளி, நிவாரண சுகாதாரத் தொழிலாளி ஆகிய மாற்றுப் பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு, அவர்களது விபரங்களை அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு கோரியுள்ளது.

நியமனம் பெற்ற நாளில் இருந்து 1992 ஜனவரி மாதம் 15ம் திகதி வரை தொடர்ச்சியாகச் சேவையாற்றியவர்கள் தமது நிரந்தர நியமனத்திற்கு நியமனக் கடிதம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை, உண்மைப் பிரதிகள் எனச் சிபார்சுசெய்து, 26-10-92க்கு முன் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (157)

---

## தாளையடியில்
# பீரங்கித் தாக்குதல் பெண் காயம்

(தாளையடி)
நேற்று முன்தினம் காலை ஏழு மணியளவில் தாளையடி கடற்பரப்பில் கரைக்கு மிக அண்மையில் நின்ற கடற்படையின் பீரங்கி படகு ஒன்று உடுத்துறை குடிமனைப் பகுதிகளை தொடர்ச்சியாக பீரங்கிதாக்குதல்களை நடாத்தியது.

ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு மிக அண்மையில் விழுந்து வெடித்தது வித்தியாலய மாணவர்கள் எவரும் காலைவேளை அங்கு இல்லாமையினால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டது.

உடுத்துறை வடக்கைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரின் நெற்றியில் காயம் ஏற்பட்டு மருதன்கேணி கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (163)

---

## கிளைக் குழு தேர்தல்

(வட்டுக்கோட்டை)
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 34 கிளைகளினதும் கிளைக்குழுத் தேர்தல் இன்று 17ம் திகதி சனிக்கிழமை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தபோதும் இரண்டு கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தலே நடைபெறவுள்ளது.

சுழிபுரத்திலுள்ள 6ம், 7ம் இலக்க கிளைகளுக்கான தேர்தலே நடைபெறும். ஏனைய 32 கிளைகளினதும் கிளைக்குழு தேர்தலில் போட்டியின்றி கிளைக்குழுவினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

---

## நிரந்தர அதிபர்களாக
# நியமனம் பெறுவர்

(வட்டுக்கோட்டை)
1990ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிபர்களாகக் கடமை புரிந்த ஆசிரியர்கள், நிரந்தர அதிபர்களாக வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட உவளனர்.

இத்தகைய ஆசிரியர்கள், நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றிய பாடசாலைகளின் தரத்திற்கே நியமிக்கப்பட உள்ளதாக அறியக் கிடக்கின்றது.

மேற்படி காலப் பகுதிக்கு முன்னர் நிறைவேற்று ஆசிரியர்களாகக் கடமை புரிந்த ஆசிரியர்களது பெயர், கடமை புரிந்த பாடசாலை, பாடசாலையின் தரம், ஆசிரியரின் தராதரம், பிறந்த திகதி முதலான விபரங்களை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு கோட்டப் பணிப்பாளர்களை வடக்கு-கிழக்கு மாகாணசபை கோரியுள்ளது. (139)

---

## அக்கரைப்பற்றில்
# அகதிகளுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை

(மட்டக்களப்பு)
அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள சுமார் 800 தொழிலாளர்கள் எதுவித தொழிலும் இன்றி இவர்கள் குடும்பம் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளது. இங்கு சுமார் 1500 ஏக்கர் நெற் செய்கை நிலம் செய்கைமேற் கொள்ளபடாதுள்ளது.

இப் பகுதியில் சுமார் 120 குடும்பம் அகதிமுகாமில் தஞ்சம் புகுந்துள்ளன. 250 பிள்ளைகள் தந்தை தாயை இழந்து அனாதைகளாக உள்ளனர். இவர்களுக்கு எதுவித நிவாரணமோ, உதவிகளோ இன்று வரை கிடைக்கவில்லை எனவும் ஏனைய விடயங்களிலும் தமிழ்பகுதி கூடுதலாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் 500 மீனவர் குடும்பம் தொழில்வாய்ப்பின்றி கடலுக்குச் செல்ல முடியாது பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்துகிடைத்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154

---

## பட்டம் பெற்றவர்களை
# பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு மாற்ற முடிவு

(வட்டுக்கோட்டை)
இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களில் பட்டதாரிச் சான்றிதழ் பெற்றவர்களைப் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தகைய பயிலுநர் ஆசிரியர்கள் பட்டம் பெற்றிருந்தால், பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு மாற்றுவதற்கான விண்ணப்பப் படிவத்தை, பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட நிர்வாக அலுவலர் திரு. சபாநாதனிடம் பெற்று அதனைப் பூரணப்படுத்தித் தருமாறு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. எஸ் வி மகேசவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மிக விரைவில் இந்தப் பதவி மாற்றம் செய்யப்படவிருப்பதால் உடனடியாகப் படிவத்தைப் பெற்று, அதனைப் பூரணப்படுத்தி அதிபரின் சிபார்சுடன் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (139)

---

## சுவிஸிலிருந்து
# 'ஞான தர்சனம்' ஆன்மீக ஏடு

(திருநெல்வேலி)
சுவிற்ஸர்லாந்தில் வாழும் தமிழ் அன்பர்களினால் 'ஞான தர்சனம்' என்னும் ஸ்ரீகிருஷ்ண பக்தர்களுக்கான ஆன்மீக ஏடு வெளியிடப்படுகிறது.

முத்துலிங்கம் நிமலகுமார் என்ற ஆசிரியரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் இந்த ஏடு, உலகெங்கும் உள்ள அன்பர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளின் நூலகங்களுக்கும் இந்த ஏடு இலவசமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஏட்டில், பகவத்கீதை, கிருஷ்ண அவதாரங்கள், சாயிபாபா பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. (157)

---

## கொர்ப்பச்சேவ் மீது
# கிரிமினல் குற்றச்சாட்டு

[மொஸ்கோ]
தற்போதைய ரஷ்ய அரசு தம்மைப் பழிவாங்கும் நோக்கில் தம்மீது கிரிமினல் குற்றம் சுமத்த திட்டமிட்டுவருவதாக முன்னாள் சோவியத் அதிபர் மிகையில் கொர்பச்சேவ் அச்சம் தெரிவித்துள்ளார்.

2ம் உலகப்போரின்போது சோவியத்தின் செம்படை வீரர்களால் கொல்லப்பட்ட 15 ஆயிரம் போலந்து மக்கள் குறித்த தகவல்களை தாம் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இரகசியமாக பாதுகாத்து வந்ததாக குற்றம்சாட்டியே தம்மீது வழக்கு பதிவு செய்ய திட்டமிடப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

அரசு ஒத்துக்கொள்கிறது:

# மன்னார் தாக்குதல் 5 படையினர் பலி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ரோந்து சென்றுகொண்டிருந்த படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்ததாக சேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இத்தாக்குதலில் மேலும் 3 படையினர் படுகாயமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு)

தனி ராணுவம் இல்லையெனில்

# முஸ்லிம் எம். பிக்கள் ராஜினாமா செய்வர்

## அஷ்ரப் எச்சரிக்கை!

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கென தனியான ஒரு இராணுவத்தை உருவாக்குவதற்கு அரசு சம்மதம் தெரிவிக்காவிட்டால் நடாளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் எம். பிக்கள் அனைவரும் இராஜினாமாச் செய்வார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜனாப் அஷ்ரப் அரசுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தற்போது அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்த 20 முஸ்லிம் எம். பிக்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஜனாப் அஷ்ரப்பின் கட்சியைச் சேர்ந்த 4 எம். பிக்கள் இருக்கின்றனர்.

நாடாளுமன்றத்திலிருந்து முஸ்லிம்கள் ராஜினாமாச் செய்தால் அரசுக்கோ அல்லது அவர்களைச் சேர்ந்த கட்சிகளுக்கோ எந்த ஒரு பாதிப்பும் ஏற்படமாட்டாது என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள். (வி)

# சுதந்திரக் கட்சிக்குள் ஸ்திரமற்ற நிலை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் ஸ்திரமற்ற நிலை கட்சியை மேலும் பலவீனப்படுத்திவிடும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கவலைப்பட ஆரம்பித்துள்ளனர்.

கட்சிக்குள் ஏற்படும்கோஷ்டி மோதல்களாலேயே இந்நிலை ஏற்பட்டுவருவதாகவும் இந்நிலையினால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அரசியல் அனுகுமுறைக்கு இக்கட்சி ஈடுகொடுக்க முடியாது போகலாம் என்றும் கட்சி வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச)

## பனம் சீனி உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது ஏற்பட்டுள்ள போக்குவரத்து தடைகாரணமாக சீனிக்கு தட்டுப்பாடு உருவாகியுள்ளது.

இந்நிலையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர் பனஞ்சீனியை உற்பத்தி செய்து மக்கள் தேவையை ஓரளவேனும் பூர்த்திசெய்யுமாறு வடமாகாணத்திலுள்ள தென்னை பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களையும் பனை அபிவிருத்தி சபையினரையும் மற்றும் தனிநபர் பதனீர் உற்பத்தியாளர்களையும் கேட்டுக் கோள்கிறனர்.

# 2,900 ஆசிரியர்கள் வடக்கு-கிழக்கில் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இவ் ஆண்டில் 2,900 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக கல்விச்சேவைகள் சபைத் தலைவர் திரு. ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 300 பேர் மட்டுமே சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் என்றும் ஏனையவர்கள் அனைவரும் தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் என்றும் வடபகுதியில் மட்டும் இவ்வாண்டில் 1,700 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## முஸ்லிம் இராணுவம்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கான தனி இராணுவம் ஒன்றை அமைக்க மத்தியகிழக்கு நாடுகளிடம் இருந்து நிதிஉதவியை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை ஓய்வு பெற்ற விமானப்படை கமாண்டர் ஹரி குணதிலக தெரிவித்தார்.

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் பி. ப. 2 மணிமுதல் 5 மணி வரை சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை சங்கானை உ. அ. அ. பிரிவில் காலை 9·30 மணிமுதல் 12-30 மணிவரை வட்டு இந்துக்கல்லூரியிலும் காரைநகர் உ. அ. அ. பிரிவில் பி. ப. 2 மணிமுதல் 5மணிவரை களபூமி பரமேஸ்வரன் மெய்கண்டான் பாடசாலையிலும் நடைபெறும். (சி)

## மனைப் பொருளியல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை 1992க்கான மனைப்பொருளியல் செயன்முறைப்பரீட்சை இம்மாதம் 28ம் திகதி தொடக்கம் நவம்பர் 8ம் திகதி வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என்றும் வெளி மாவட்ட பரீட்சார்த்திகளுக்கும் 1ம் திகதி தொடக்கம் இப்பரீட்சை நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சு-159)

## இறந்தோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் இறந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 50ஆயிரம் ரூபாவும், கணவனை அல்லது மனைவியை இழந்தவருக்கு 25 ஆயிரம் ரூபாவும், இறந்த சிறுவர்களின் குடும்பங்களுக்கு 18 ஆயிரம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்படவுள்ளன.

இச்சம்பவத்தின்போது காயமடைந்தவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் குழந்தையாயின் 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இதேவேளையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக இரண்டாயிரம் ரூபாவும் உணவு நிவாரணமும் வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## அரசுக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸ் தலைவர் எம். எம். அஷ்ரப் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கையில்:

பொலநறுவை சம்பவத்திற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். முஸ்லிம்களை பாதுகாக்க அரசு தவறிவிட்டது எனவே இலங்கை இராணுவத்தில் தனியாக முஸ்லிம் படைப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

முஸ்லிம்களுக்கு அரசு தகுந்த பாதுகாப்பு வழங்கத் தவறியதால் அரசுக்கான எமது ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டியதொருநிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

பொலநறுவை எல்லைக்கிராமங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்தே முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறு கோரியுள்ளதாம். (க-சி)

## வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரிலேயே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனைத்து நடவடிக்கைகளுக்குமென முழுக் கண்காணிப்பையும் கூட்டுப்படைத் தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க மேற்கொள்வார் என்றும் கேர்ணல் முனசிங்க தெரிவித்தார். (சி-க)

## 'வெளிச்சம்' இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் வெளியிடும் 'வெளிச்சம்' புரட்டாதி, ஐப்பசி 1992 இதழ் இன்று வெளிவருகிறது. முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழான இந்த இதழ் சிறுகதைச்சிறப்பிதழாக வெளிவருகிறது.

## இலங்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தலின் போது முன்னைய பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்ரோன் தலையிட்டதாக குற்றஞ்சாட்டி அவரை இலங்கை வெளியேற்றியதை அடுத்து பிரிட்டன் இலங்கைக்கான பொருளாதார உதவியை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கே)

## 650 மெ. தொன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெள்ளிக்கிழமை வானொலி மூலம் யாழ்ப்பாணச் செயலக திட்டமிடல் பணிப்பாளருக்கு அவர் அறிவித்த செய்தியில் மா அனுப்புவதாக உறுதியளித்துள்ளார்.

இரு தினங்களுக்கு முன் திட்டமிடல் பணிப்பாளர் திரு. பத்மநாதன் வானொலி மூலம் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொண்டது குறிப்பிடத்தக்கது. (157)

## விசாரணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை சமர்ப்பிப்பதற்கென பாதுகாப்பு அமைச்சு தனிநபர் குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஓய்வுபெற்ற கடற்படை தளபதி அட்மிறல் எச். எவ். சில்வா இந்த கிராமங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு காரணமாயிருந்த சூழ்நிலை பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார்.

இத்தாக்குதலின்போது இறந்தவர்களின் சரியான எண்ணிக்கை, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை பற்றியும் இந்த கிராமங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்ததா இல்லையா என்பதுபற்றியும் அவர் தனது அறிக்கையில் தெரிவிப்பார்.

அத்தோடு இனிமேல் கிராமங்களின் பாதுகாப்பு பற்றியும் குறிப்பாக இத் தாக்குதல் இடம்பெற்ற கிராமங்களின் பாதுகாப்பு பற்றியும் இந்த தனிநபர் ஆணைக்குழு தனது சிபார்சுகளை சமர்ப்பிக்கும்.

## தெரிவுக் குழு

(4-ம் பக்கம் பார்க்க)

வர் மங்கள முனசிங்க இனப்பிரச்னை தீர்வு குறித்து அறிக்கை ஒன்றை தமிழ்கட்சிகளின் பரிசீலனைக்கு அண்மையில் சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே. (க)

## ஈழத்தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்.

மேலும் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தையடுத்து தமிழகத்தில் கல்வி பயின்றுவரும் இலங்கைத் தமிழ் மாணவர், மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகள்மீது தமிழக பொலிசாரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதும் தெரிந்ததே. (க)

## யுத்த செலவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க)

## புலிகள்-பிரேமா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனிலிருந்தும விடுதலைப் புலிகள் பிரமுகர் இருவர் கொழும்பு வந்ததாகவும்இவர்கள் பௌத்த தலைவர்களையும், கிறிஸ்தவ தலைவர்களையும், தொண்டர் நிறுவன பிரமுகர்களையும் சந்தித்திருப்பதாகவும் அச்செய்தியில மேலும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகள் மறுப்பு

இதேவேளையில் இலங்கை அரசுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லையென புலிகள் அறிவித்துள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) முன்னோடிப் பரீட்சை இம்மாதம் 27-ம் திகதி தொடக்கம் நடைபெறும்.

இதற்கான அனுமதிஅட்டைகளை பாடசாலை அதிபர்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் சேகரித்து பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்குமாறு யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு-159)

## கொழும்பில்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமையாக இருந்ததால் கொழும்பிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களைச் சுற்றியும் பலத்த இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. (வி)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திலிருந்து தப்பியோடும் சிப்பாய்களும் இவ்வாறு கூறி பல கொள்ளைகளில் ஈடுபட்டுவருவதாகவும் இதுபற்றிடல புகார்கள் பொலிசாருக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-க)

## தமிழ் கிராமங்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது

மேலும் பொலநறுவை எல்லைக் கிராமங்களிற்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## அடையாள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் டிசம்பர் மாதத்துடன் காலாவதியாகின்றது என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் விடுத்த அறிக்கைக்கே யாழ் அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு கோரிக்கைவிடுத்துள்ளார்.

அவர் ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: யாழ். மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள அசம்பாவிங்கள் காரணமாக அளப்பரிய கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாலும் அநேகம் பேர் இடம் பெயர்ந்து இருப்பதாலும் புகைப்படம் பிடித்தற்கான உபகரணங்களை படப்பிடிப்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியாமையாலும் காலக் கெடுவை நீடிக்கும்படி மேலும் அவர் கேட்டுள்ளார். (161)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81